# பொதுக்காலம் 14ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“இறைவா! யாம் இரப்பவை பொன்னும் பொருளும் அல்ல, நின்பால் அன்பும் அருளும் அமைதியுமே” என்ற சிந்தனையை வாழ்வாக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

‘என் இறைவா! என் இதயம் உம்மில் அன்றி வேறு யாரிடம் அமைதி பெறும்’ என்கிறார் புனித அகுஸ்தினார். ‘நிறை அன்பை அளிக்கும் தாயினும் மேலாக நான் உங்களைத் தேற்றுவேன்’ என்ற இறைவார்த்தையையும் ஆறுபோல் நிறைவாழ்வு பெருக்கெடுக்கும் என்ற இறையன்பை ஆழமாக உணர்ந்தவர் புனித தோமா.

அறிவில் வளம்பெற, உறவு உரம்பெற, ஆன்மீகம் ஆழம் காண கேள்விகள் அவசியமானது, உறுதி செய்ய வழிகோலுகின்றது.

இன்றைய அருள்வாக்கு வழிபாடு அமைதியைப் பற்றிப் பேசுகின்றது. அமைதி என்பது கடவுளின் கொடை. எந்த வீட்டிற்குச் சென்றாலும் அங்கு அமைதி உண்டாகுக என்று வாழ்த்த பணிக்கிறார் இயேசு. ‘கிறிஸ்துவை நம்பும் ஒவ்வொருவருக்கும் அமைதியும் இரக்கமும் உரித்தாகுக’ என்கிறார் புனித பவுல். சீடர்களாக வாழ்வது ஆண்டவரின் மேல் கொண்ட அன்பை அதிகப்படுத்தும். அளவில்லாத அன்பும் இறைப்பராமரிப்பின்மீது நம்பிக்கையும் கொண்டு வாழ நம்மைத் தூண்டும். இறைவனைப் பின்பற்றும்போது நமக்கு நூறு மடங்கு ஆசீர்வாதமும் அதே சமயம் துன்பமும் சவால்களும் இருக்கும் என்பதை உணர்ந்தவர்களாய் இப்பலியில் இணைவோம். இயேசுவின் உண்மையான சீடர்களாக வாழ முயற்சிப்போம்.

### முதல் வாசக முன்னுரை(எசாயா 66: 10-14c)

தாய் தன் பிள்ளையை தேற்றுவதுபோல நான் உங்களைத் தேற்றுவேன்; உங்கள் இதயம் மகிழ்ச்சி அடையும் என்று ஆறுதல் தரும் செய்தியை மக்களுக்கு அறிவிக்கிறார் இறைவாக்கினர் எசாயா. ஆண்டவர் மக்களினங்களுக்கு அளிக்கும் தீர்ப்பு பற்றி கூறும் இவ்வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை(கலாத்தியர் 6: 14-18)

இயேசுவின் சிலுவையே அன்றி வேறெதிலும் பெருமை பாராட்டமாட்டேன் என்கிறார் புனித பவுல். சிலுவை மீட்பின் சின்னம்; நம்பிக்கையின் சின்னம். இந்த

சிலுவையால் மீட்பு அடைவோம், வாழ்வு பெறுவோம் என்ற நம்பிக்கையில் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருளின் ஊற்றே இறைவா!

எம் திருஅவை தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் இறையாட்சியின் மதிப்பீடுகளை வாழ்வாக்கவும், தியாக உள்ளத்தோடு பிறருக்குப் பணி செய்யவும் தேவையான அருளைப் பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா!

எம் நாட்டில் மக்கள் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் கண்டு அமைதியில் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கத்தின் இறைவா!

மருத்துவமனையில் பல்வேறு நோயினால் அவதியுறும் அனைவரும் நலம் பெறவும், குடும்பங்களில் நிறைவான அமைதியும் ஆசீரும் கிடைக்கவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. கருணையின் இறைவா!

எம் நாட்டு இளைஞர்கள், மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், தெய்வபயம் கொண்டு வாழவும், மூத்தோர் சொல் கேட்டு நடக்கவும் அருள் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com